# உம்ரா செய்வது எப்படி

தயாரித்தவர்
யாஸிர் அல்புஹைத்
மேற்பார்வை
சேக் ஸஅத் அல்ஹஸ்லான்
தமிழில்
முஹம்மத் ஐயூப்

| தவறினால் சட்டம் | செய்ய வேண்டிய காரியங்கள் | சட்டம் | எ | செயல் | எ |
|---|---|---|---|---|---|
| ஒன்றுமில்லை | குளித்து சுத்தமாகி நறுமணம் பூசுதல் (நறுமணம் பூசுவது ஆண்களுக்கு மாத்திரம்) | சுன்னத்து | 1 | (முதலாவது ருக்ன்) இஹ்ராம்<br><br>இஹ்ராமிற்காக * நிய்யத்து வைத்தல் | 1 |
| குற்றமில்லை | சுத்தமான வெள்ளை இஹ்ராம் ஆடை அணிதல். பெண்கள் விரும்பும் ஆடையை அணியலாம். | சுன்னத்து | 2 | | |
| மறுபடியும் மீகாத் வந்து நிய்யத் வைத்தல் அல்லது பித்யா கொடுத்தல் | மீகாத்தில் நிய்யத் வைத்தல் (லப்பைக உம்ரதன்) அல்லது (அல்லாஹு ம்ம லப்பைக உம்ரதன்) என்று சொல்ல வேண்டும் | வாஜிப் | 3 | | |
| குற்றமில்லை | ஒரு தொழுகைக்குப் பின் உம்ராவின் கிரியைகளை ஆரம்பித்தல் உதாரணமாக வுலூவுடைய சுன்னத் தொழுகைக்குப் பின் | சுன்னத்து | 4 | | |
| குற்றமில்லை | மீகாத் வருமுன் உம்ராவிற்காக நிய்யத்து வைத்தல் | மக்ரூஹ் | 5 | | |
| எண் 1ஐப் பார்க்க | நோய் போன்ற ஏதாவது காரணத்தினால் உம்ரா தடைபடும் என்ற பயம் ஏற்பட்டால் (அல்லாஹு ம்ம லப்பைக உம்ரதன் பஇன் ஹபஸனீ ஹாபிசுன் பமஹில்லீ ஹய்சு ஹபஸ்தனீ) என்று ஷரத்துடன் நிய்யத்து வைத்துக்கொள்ளலாம் | சுன்னத்து | 6 | | |
| குற்றமில்லை | மீகாத் பள்ளி அல்லாத இடத்தில் இஹ்ராம் அணிதல் | ஆகுமானது | 7 | | |
| (எண் 2ஐப் பார்க்க) ஒன்றுமில்லை | உம்ராவிற்கு நிய்யத்து வைத்ததிலிருந்து தொடர்ந்து தல்பியா கூறுவது (ஆண்கள் சப்தமாக) | சுன்னத்து | 8 | | |
| குற்றமில்லை | மக்காவினுல் நுழையும் போது குளித்தல் | சுன்னத்து | 1 | (இரண்டாவது ருக்ன்) தவாப்<br><br>ஏழு சுற்றுக்கள் | 2 |
| தவாப் கூடாது | தவாபின் போது சுத்தமாக இருத்தல் (பெருந்தொடக்கை விட்டு நீங்கி வுழூவோடு இருத்தல்) | வாஜிப் | 2 | | |
| குற்றமில்லை | மஸ்ஜிதுல் ஹராமினுள் நுழையும் போது வலது காலை வைத்து (பிஸ்மில்லாஹி வஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ரஸூ லில்லாஹ் அல்லாஹு ம்மப்தஹ்லீ அப்வாப | சுன்னத்து | 3 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரஹ்மதிக அஊது பில்லாஹில் அழீம் வபிவஜ்ஹிஹில் கரீம் வபிசுல்தானிஹில் கதீம் மினஷ்ஷைத்தானிர்ரஜீம் | | | | |
| குற்றமில்லை | இஹ்ராம் நிய்யத்து வைத்ததிவிருந்து தவாப் ஆரம்பிக்கும் வரை தொடர்ந்து தல்பியா சொல்லல் | சுன்னத்து | 4 | | |
| தவாப் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது | கஃபாவை தன் இடது பக்கமாக ஆக்கி ஹஜருல் அஸ்வதிற்கு நேராக இருந்து தவாபை ஆரம்பித்தல் | வாஜிப் | 5 | | |
| குற்றமில்லை | தவாபின் ஒவ்வொரு சுற்றிலும் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல் அல்லது கையால் தொட்டு முத்தமிடல் அல்லது கையால் சுட்டிக்காட்டி அல்லாஹு அக்பர் என்று சொல்லுதல் (7வது சுற்று முடியும் போதும் சொல்ல வேண்டும்) | சுன்னத்து | 6 | | |
| குற்றமில்லை | ஆண்கள் மாத்திரம் தவாபின் முதல் மூன்று சுற்றிலும் விரைவாக நடப்பது | சுன்னத்து | 7 | | |
| குற்றமில்லை | தவாபில் ஆண்கள் தங்கள் மேல் சால்வையை வலது புஜத்தை திறந்து இடது புஜத்தை மூடி அணிதல் | சுன்னத்து | 8 | (இரண்டாவது ருக்ன்) தவாப் ஏழு சுற்றுக்கள் | 2 |
| குற்றமில்லை | தவாபின் போது (முடிந்தால்) ருக்னுல் யமானியை முத்தமிடாமல் தொடுவது மாத்திரம் (முடியவில்லை என்றால் சுட்டிக்காட்டுவதோ தக்பீரோ சொல்லாமல் கடந்து செல்லுதல்) | சுன்னத்து | 9 | | |
| குற்றமில்லை | தவாபின் போது ஓய்வுக்காக அல்லது தொழுகைக்காக அல்லது வேறு மாடிக்கு மாறுவதற்காக சிறிது தாமதித்தல் | கூடும் | 10 | | |
| குற்றமில்லை | ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வதுக்கும் இடையில் (ரப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன்னார்) என்று ஓதவேண்டும் | சுன்னத்து | 11 | | |
| குற்றமில்லை | தவாபின் சுற்றுக்களில் துஆ கேட்பது ஆனால் ஒவ்வொரு சுற்றுக்கும் குறிப்பிட்ட துஆ | சுன்னத்து | 12 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிடையாது | | | | |
| குற்றமில்லை | தவாபின் பின் புஜங்களை மூடுவது. தொழுகையின் போது கட்டாயம் | கூடும் | 1 | (சுன்னத்து) மகாமு இப்ராஹீமுக்குப் பக்கத்தில் தொழுவதும் ஜம்ஜம் நீர் அருந்துவதும் | 3 |
| குற்றமில்லை | தவாப் முடிந்த பின் மகாமு இப்ராஹு முக்குப் பின்னால் இரண்டு ரக்அத்துக்கள் தொழுதல் | சுன்னத்து | 2 | | |
| குற்றமில்லை | மகாமு இப்ராஹு முக்கு அருகில் (வத்தகதிதூ மின் மகாமி இபிராஹீம முஸல்லா)என்ற ஆயத்தை ஓதுதல் | சுன்னத்து | 3 | | |
| குற்றமில்லை | தவாபின் சுன்னத்தை பள்ளியில் எந்த இடத்திலும் தொழுதல் | கூடும் | 4 | | |
| குற்றமில்லை | முதலாவது ரக்அத்தில்(குல் யா அய்யுஹல் காபிரூன்)ஐயும் இரண்டாவது ரக்அத்தில் (குல் ஹு வல்லாஹு அஹத்)ஐயும் ஓதுதல் | சுன்னத்து | 5 | | |
| குற்றமில்லை | ஜம்ஜம் நீரை வயிறு நிரம்பும் வரை அதிகமாக அருந்துதல் | சுன்னத்து | 6 | | |
| குற்றமில்லை | தவாபின் சுன்னத்துக்குப் பின் முடிந்தால் ஹஜருல் அஸ்வதை முத்தமிடல்(சைகை செய்வது கூடாது) | சுன்னத்து | 7 | | |
| குற்றமில்லை | ஸஃயின் தொடக்கத்தில் ஸபாவை நெருங்கியவுடன் (இன்னஸ்ஸபா வல் மர்வத மின் ஷஆஇரில்லாஹ்)என்றும் (அப்தஃ பிமா பதஅல்லாஹு பிஹி) என்றும் சொல்லுதல் | சுன்னத்து | 1 | (மூன்றாவது ருக்ன்) ஸஃய் ஏழு சுற்றுக்கள் செல்வது ஒரு சுற்று திரும்பி வருவது இன்னொரு சுற்று | 4 |
| குற்றமில்லை | ஸபா மலையின் மீது ஏறுதல்(ஏறாமலும் இருக்கலாம்) | சுன்னத்து | 2 | | |
| குற்றமில்லை | ஸபா மர்வா மலைகளின் மேல் ஏறி பின் வரும் துஆவை மூன்று முறை ஓதுதல்(அல்ஹம்து லில்லாஹ் அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹு ல் முல்கு வலஹு ல் ஹம்து வஹு வ அலா குல்லி ஷய்இன் கதீர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு அன்ஜஸ வஃதஹு வநஸர அப்தஹு வஹஜமல் அஹ்ஜாப வஹ்தஹு ) | சுன்னத்து | 3 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குற்றமில்லை | ஆண்கள் மாத்திரம் பச்சை விளக்கிட்ட அடையாளங்களுக்கு மத்தியில் ஓடுதல் | சுன்னத்து | 4 | (மூன்றாவது ருக்குன்) ஸஃய் ஏழு சுற்றுக்கள் செல்வது ஒரு சுற்று திரும்பி வருவது இன்னொரு சுற்று | 4 |
| குற்றமில்லை | ஸஃயின் எல்லா சுற்றிலும் துஆ கேட்பது ஒவ்வொரு சுற்றுக்கும் குறிப்பிட்ட துஆ கிடையாது | சுன்னத்து | 5 | | |
| குற்றமில்லை | ஸஃயின் போது தொழுகைக்காக அல்லது ஓய்வுக்காக (அதிகம் நீடிக்காமல்) சற்று தாமதித்தல், அமருதல் | ஆகுமானது | 6 | | |
| குற்றமில்லை | ஸஃயின் போது சுத்தமாக (வுழுவோடு) இருத்தல் (வாஜிப் இல்லை) | சுன்னத்து | 7 | | |
| | | | | | |
| குற்றப்பரிகாரமாக ஒரு பித்யா கொடுக்க வேண்டும் | தவாபிற்கும் ஸஃயிற்கும் பின் தலைமுடியை மழித்தல் அல்லது கத்தரித்தல் (பெண்கள் கூந்தலில் ஒரு விரல் மடிப்பளவு கத்தரித்தல்) | வாஜிப் | 1 | (வாஜிப்) தலை முடியை மழித்தல் அல்லது முழுவதையும் குறைத்தல் | 5 |
| தலை முடியை முழுவதுமாக குறைத்தால் குற்றம் இல்லை | தலை முடியை மழித்தல் (நபி (ஸல்) அவர்கள் இறைவா தலை முடியை மழிப்பவர்களுக்கு ரஹ்மத் செய்வாயாக என்று துஆச் செய்தார்கள் அப்போது (ஸஹாபாக்கள்) கூறினார்கள் முடியை வெட்டுபவர்களுக்கும் யாரஸூ லல்லாஹ் என்று மறுபடியும் வழிப்பவர்களுக்கு துஆச் செய்தார்கள் இவ்வாறு மூன்று முறை சொன்னதும் ஸஹாபாக்கள் வெட்டுபவர்களுக்கும் துஆச் செய்யுங்கள் என்று கேட்க வெட்டுபவர்களுக்கும் என்று சொன்னார்கள் | சுன்னத்து | 2 | | |

இஹ்ராமின் போது ஹராமான காரியங்கள்

1. தலை முடி அல்லது வேறு முடிகளை நீக்குதல்
2. நகம் வெட்டுதல்
3. மணம் பூசுதல்
4. மனைவியோடு இன்பம் அனுபவித்தல்
5. உடலுறவுகொள்ளுதல்
6. வேட்டையாடுதல்
7. திருமண ஒப்பந்தம் செய்தல்
8. உடலில் அணியும் வண்ணம் தைக்கப்பட்ட ஆடைகளை அணிதல் (ஆண்களுக்கு மாத்திரம் ஹராம்)
9. தலையை மூடுதல் (ஆண்களுக்கு மாத்திரம் ஹராம்)
10. முகமூடி அணிதல் (பெண்களுக்கு மாத்திரம் ஹராம்)
11. கையுறை அணிதல் (பெண்களுக்கு மாத்திரம் ஹராம்)

(1) ஒருவர் ஷரத்திட்டு உம்ராவை செய்ய முடியாமல் போனால் அவருக்கு குற்றம் ஏதும் கிடையாது. இல்லையேல் தடுக்கப்பட்டவரின் சட்டம்

(2) தல்பியா கூறும் முறை:
(லப்பைக அல்லாஹும்ம லப்பைக் லப்பைக லா ஷரீக லக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமத லக வல்முல்க் லா ஷரீக லக்)

தவாபின் போது:
ஒருவர் தவாபும் ஸஃயும் செய்யும் போது இறையச்சத்துடனும் இறைவனின் பொருத்தத்தை நாடியவனாகவும் இருப்பதோடு துஆவிலும் திக்ருகளிலும் ஆர்வமாக ஈடுபடவேண்டும்